# සමබිමට පියවරක්

මැතිවරණ වියදම් සීමාකිරීමේ නීතිය

# சமதளத்திற்கான முனைப்பு

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம்




PAFFREL

# சமதளத்திற்கான முனைப்பு

## 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் பற்றிய இலகுவான அறிமுகம்




ப:்.வ்ரல் அமைப்பு
2023

# சமதளத்திற்கான முனைப்பு

2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை
ஒழுங்குபடுத்துதல் சட்டம் பற்றிய இலகுவான அறிமுகம்

**முதற்பதிப்பு** – 2023 ஜனவரி

**நூல் உருவாக்கம்**
சட்டத்தரணி ஜகத் லியன ஆராச்சி

**வெளியீடு**
ப.்.வ்ரல் அமைப்பு

இல.16,பேர்ட் பிரதேசம் பாமன்கட வீதி, கொழும்பு-06

**Tel: 011 2 558 570/1 Fax: 011 2 558 572**
**paffrel@sltnet.lk**
**www.paffrel.com**

**கணணி வரைகலை**
ப.்.வ்ரல் ஊடகப்பிரிவு

**அச்சுப்பதிப்பு**
………………………
……………
……….

# சமதளத்திற்கான ஒரு முனைப்பு

சமமான தளத்தில் தேர்தல் நடாத்தப்பட்டால் மாத்திரமே, மக்கள் இறைமையின் அடிப்படைக் கூறாகவுள்ள வாக்குரிமையை நீதியான முறையில் பிரயோகிக்க முடியும். அவ்வாறில்லாமல், நிதிசார் காரணிகள் தேர்தல் செயன்முறையில் தீர்மானம்மிக்க விடயமாக அமையுமெனின், அதன் மூலம் உண்மையான மக்களுடைய கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றதா என மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயமாகும்.

அவ்வாறான சூழலில் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டுமென்ற உரையாடல் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமாக இடம்பெற்று வருகின்ற விடயமாகும். அண்மைக்காலத்தில் குறித்த உரையாடல் கணிசமாக இடம்பெற்றதுடன், 2016 ஆம் ஆண்டில் முன்னாள் மாகாண உள்ளூராட்சி விடயதான அமைச்சர் ஃபயிசர் முஸ்தப்பா அவர்களின் தலைமையில் உள்ளூரதிகாரசபைகள் முறைமைத் திருத்தக் குழுவில் பஃவ்ரல் அமைப்பு இவ்விடயத்தை எடுத்துக்கூறியதுடன், அதன் பிரகாரம் ஏற்பட்ட உடன்பாடுகளுக்கமைய, இதுதொடர்பாக ஆர்வங்காட்டுகின்ற கண்காணிப்பு அமைப்புக்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுடன், நிபுணத்துவர்கள், அரசியற் கட்சிகள் மற்றும் தேர்தல் ஆணைக்குழு ஆகியோரின் கருத்துக்களையும் உள்வாங்கி 2016 ஆம் ஆண்டில் அடிப்படைச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது. குறித்த சட்டமூலம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களுக்கும், தேர்தல் ஆணைக்குழுவுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் தேர்தல் ஆணைக்குழுவின் தலையீட்டின் அடிப்படையில் மிகவும் வலுவான சட்ட ஏற்பாடுகளுடன் கூடிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டதுடன், அதற்கு கௌரவத்திற்குப் பாத்திரமான தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, நலின் அபேசேகர அவர்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவைச் சாரும். ஆனாலும், குறித்த சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்படாததுடன், அதனைச் சட்டமாக நிறைவேற்றுவதற்கு, பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா உள்ளிட்ட

ஆணைக்குழு மற்றும் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் செயலாற்றியதுடன், அதற்கு அவர்களும் கௌரவத்திற்குப் பாத்திரமானவர்களாவர். அத்துடன், இச்சட்டத்தின் குறைபாடுகளுடன் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் நீதி அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவைக்கும் ஒத்துழைப்பு வழங்கிய மக்கள் பிரதிநிதிகளுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

ப∴வ்ரல் அமைப்பின் தலைமைத்துவத்தில் தயாரிக்கப்பட்ட அடிப்படைச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்ட பெரும்பாலான சிறந்த விடயங்கள் இச்சட்டத்தின் மூலம் உள்வாங்கப்படாமை பற்றி எமக்கு விமர்சனங்கள் இருப்பினும், ஒரு ஆரம்பமாக இவ்வாறான சட்டத்தைக் கொண்டு வந்துள்ளமை ஒரு நேர்மய விடயமென்பதே எமது நம்பிக்கையாகும். உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் இச்சட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் நடாத்தப்படவுள்ள தேர்தலுக்கு சவாலாக அமையுமா என எம்மிடம் சந்தேகம் எழுந்திருந்த வேளையில், சட்டம் நிறைவேற்றப்பட்டு இரண்டு நாட்களுக்குள் சட்டத்திற்கமைவாக அதிகாரமளிக்கப்பட்ட தேர்தல் செலவினத்திற்கான பணத்தொகையைத் தீர்மானிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் அதன் அதிகாரிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எமது விசேட நன்றிகள் உரித்தாகுக.

இம்முறை உள்ளூராட்சி அதிகாரசபை தேர்தல் தொடக்கம் சட்டமாக நிறைவேற்றப்பட்டுள்ள தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் நடைமுறைச் சாத்தியமாக்கிக் கொள்வதற்கு அரசியற் கட்சிகளும் ஆர்வங் காட்டுகின்ற பிரஜைகளுக்கும் முக்கிய பொறுப்புக்கள் இருக்கின்றமையை நாம் வலியுறுத்துகின்றோம். கீழே நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையை விஞ்சிய தொகை செலவிடப்பட்டால் அதுதொடர்பாகக் கவனம் செலுத்துவதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்தல்களுக்கு ஏற்புடைய சட்டரீதியான ஏற்பாடுகளை நடைமுறை ரீதியாகப் பிரயோகிப்பதற்கு அரசியல் செயற்பாட்டாளர்கள் அறிவைக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய சட்டத்திற்கு இணங்கியொழுகுதல் வேண்டும். குறித்த நடைமுறைகள் மூலம் குறித்த காலப்பகுதியில் தேர்தலுக்காக சமதளத்தை உருவாக்குவதற்கு இயலுமை கிட்டும்.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்திற்கு ஏற்புடைய விடயங்களை இலகு மொழிநடையில் சிறுநூலாக வெளியிடும் இச்சந்தர்ப்பத்தில் குறித்த சட்டங்களை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற முன்னாள் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் சமகால தேர்தல் ஆணைக்குவுக்கும் அதன் அதிகாரிகளுக்கும், அதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்த அரசியற் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் வலுவாக்கம் செய்வதற்கு செயலாற்றிய CMEV, ட்ரான்ஸ்பெரன்ஷி இன்டர்நெஷனல் உள்ளிட்ட சகோர கண்காணிப்பு அமைப்புக்களுக்கும், ஆரம்ப அடிப்படைச் சட்டமூலம் தயாரிப்பதற்காக என்னுடன் இணைந்து ஒத்துழைப்பு வழங்கிய சட்டத்தரணி ஜகத் லியனாராச்சி, சட்டத்தரணி ஜயந்த தெஹியத்தகே அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

றோஹண ஹெட்டியாராச்சி

நிறைவேற்றுப் பணிப்பாளர்

# தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல்

2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் பற்றிய இலகுவான அறிமுகம்

**உள்ளடக்கம்**

**பக்கம்**


1. அறிமுகம் 00
2. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கூறுகள் 00
3. சட்டத்தின் மூலம் பரப்புரை செலவினங்கள் ஒழுங்குபடுத்தப்படும் தேர்தல்கள் 00
4. சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்படும் நபர்கள் மற்றும் குழுக்கள் 00
5. தேர்தல் பரப்புரை செலவினங்கள் மீதான மட்டுப்பாடு 00
6. தேர்தல் பரப்புரை செலவினங்களுக்காக நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல் மீதான தடைகள் 00
7. நன்கொடைகள் மற்றும் செலவினங்கள் பற்றிய விபரத்திரட்டை சமர்ப்பிக்கும் பொறுப்பு 00
8. நன்கொடைகள் பற்றிய விபரத்திரட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய உதவுதொகைகள் 00

9. தேர்தல் பரப்புரை செலவினங்கள் விபரத்திரட்டுக்கு உட்சேர்க்கப்பட வேண்டிய செலவினங்கள் 00

10. தேர்தல் செலவினங்கள் பற்றிய விபரத்திட்டில் உள்ளடக்கப்படாத செலவினங்கள் 00

11. தேர்தல் பரப்புரை செலவினங்கள் பற்றிய விபரத்திரட்டை மக்களுக்கு வெளிப்படுத்தல் 00

12. சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் தண்டனைகள் 00

13. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் தேர்தல் மனுக்கள் 00

14. தரப்பினர்களின் பொறுப்புக்கள் 00

15. உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023 பரப்புரை செலவுகள் மீதான மட்டுப்பாடு 00

# 01. அறிமுகம்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்காகவும், வேட்பாளர்கள் அனைவருக்கும் சமமான தளத்தை உருவாக்குவாக்குவதற்கும், அரச சொத்துக்களை தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல், தேர்தல் செயன்முறையில் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் அமைப்புக்களின் தலையீடுகளைத் தடுத்தல் போன்றன தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் தேவையை நீண்டகாலமாக வலியுறுத்தி வந்துள்ளதுடன், அதுதொடர்பான வரைபொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது. 2018-2019 ஆம் ஆண்டுகளில் தேர்தல் ஆணைக்குழுவால் தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டமூலம் தயாரிக்கப்பட்டது.

பல அரசாங்கங்கள் இச்சட்டத்தின் தேவையை ஏற்றுக்கொண்டிருப்பினும், 2022 நவம்பர் ாதம் 29 ஆம் திகதியன்றே சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. நீதி அமைச்சர் அவர்களால் முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் 2022 டிசம்பர் மாதம் 08 ஆம் திகதி இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. குறித்த சட்டமூலத்தில் காணப்பட்ட பல குறைப்பாடுகளால் இச்சட்டமூலம் அரசியலமைப்புக்கு இணங்கியொழுகவில்லை எனக்

குறிப்பிட்டு, சிவில் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவரால் இச்சட்டமூலத்திற்கு உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. (Dasanayaka Mudiyanselage Dissanayake v. Attorney General–S.C.(SD) No.72/2022)
சட்டமூலத்திற்கமைய, வேட்பாளர்களின் தேர்தல் விளம்பரங்களை மாத்திரமே ஒழுங்குபடுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற பரப்புரைச் செலவினங்களை ஒழுங்குபடுத்துவதற்கான ஏற்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கவில்லை.

உயர் நீதிமன்றம் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக சட்டமூலத்தில் அரசியலமைப்புக்கு ஒவ்வாமையாகவுள்ள ஏற்பாடுகளைத் திருத்தம் செய்வதற்கும் உயர்நீதிமன்றம் தீர்மானித்தது.

பின்னர் இச்சட்டமூலம் 2023 ஜனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. 2023 ஜனவரி மாதம் 24 ஆம் திகதி சபாநாயகர் அவர்களின் சான்றுரைப்படுத்தலுடன் சட்டம் வலுவாக்கம் பெற்றது.

## 02. தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கூறுகள்

இச்சட்டத்தின் கூறுகளாக கீழ்க்குறிப்பிடப்பட்ட பகுதிகளைக் காணலாம்

- செலவினத்தை ஒழுங்குபடுத்தும் தேர்தலை இனங் காணல்
- தேர்தல் பரப்புரை செலவுகளுக்கான அதிகாரமளிக்கப்பட்ட உயர்ந்தபட்ச தொகையை விதித்தல்
- தேர்தல் பரப்புரை செலவுகளுக்காக நன்கொடைகள் அல்லது உதவுதொகைளை ஏற்றுக் கொள்ளல் மீதான தடைகள் பற்றிய அறிமுகம்
- தேர்தல் பரப்புரை செலவுகள் பற்றிய விபரத்திரட்டை சமர்ப்பித்தல்
- தேர்தல் பரப்புரை செலவினங்கள் பற்றிய விபரத்திட்டுக்களைப் பேணுதல் மற்றும் சமர்ப்பித்தல்
- தேர்தல் பரப்புரை செலவினங்கள் பற்றிய விபரத்திட்டுக்களை பொதுதுமக்களுக்கு வெளிப்படுத்தல்
- குற்றங்கள் மற்றும் தண்டனைகளின் அறிமுகம்

## 03. சட்டத்தின் மூலம் பரப்புரை செலவினங்கள் ஒழுங்குபடுத்தப்படும் தேர்தல்கள் (2 ஆவது பிரிவு)

- உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள்
- மாகாண சபை தேர்தல்கள்
- பாராளுமன்ற தேர்தல்கள்
- சனாதிபதி தேர்தல்கள்

அதற்கமைய தேர்தல் ஆணைக்குழுவால் நடாத்துவதற்குத் திட்டமிடுகின்ற மக்கள் தீர்ப்புக்கள் (Referendum) தவிர்ந்த ஏனைய அனைத்துத் தேர்தல்களுக்கும் இச்சட்டம் ஏற்புடையனவாகும்.

## 04. சட்டத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்படும் நபர்கள் மற்றும் குழுக்கள் (4 ஆம் பிரிவு))

தேர்தலில் நியமனப்பத்திரம் சமர்ப்பித்துள்ள வேட்பாளர்களின் பரப்புரைச் செலவு

- தேர்தலில் நியமனப்பத்திரம் சமர்ப்பித்துள்ள அரசியற் கட்சிகளின் பரப்புரைச் செலவு
- தேர்தலில் நியமனப்பத்திரம் சமர்ப்பித்துள்ள சுயேச்சைக் குழுக்களின் பரப்புரைச் செலவு

## 05. தேர்தல் பரப்புரை செலவினங்கள் மீதான மட்டுப்பாடு ( 3 ஆம் பிரிவு))

அனைத்து தேர்தலிலும் நியமனக் காலப்பகுதி முடிவுற்ற பின்னர், 05 நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் தேர்தல் ஆணைக்குழுவானது, அத்தகைய தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள்

மற்றும் சுயேச்சைக் குழுக்களின் கலந்தாலோசனையுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், அத்தகைய தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஒரு வேட்பாளர் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட தொகையொன்றைக் கணக்கிடும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டியதான இலங்கை ரூபாக்களிலான பணத்தொகையொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

அதற்கமைய, குறித்த பணத்தொகையை வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம் ஒரு வேட்பாளருக்கு அல்லது அரசியற் கட்சிக்கு அல்லது சுயேச்சைக் குழுவுக்கு குறித்த தேர்தலில் செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச எல்லை எனும் அதிகாரமளிக்கப்பட்ட பணத்தொகை நிர்ணயிக்கப்படும். அதற்கமைய,

- உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான பணத்தொகை வேட்பாளர் போட்டியிடுகின்ற உள்ளூராட்சி சபையின் வட்டாரத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம்,
- மாகாண சபைத் தேர்தலில் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான பணத்தொகை வேட்பாளர் போட்டியிடுகின்ற நிர்வாக மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம்,

- மாகாண சபைத் தேர்தலில் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான பணத்தொகை வேட்பாளர் போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம்,
- ஜனாதிபதி தேர்தலில் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான பணத்தொகை வேட்பாளர் போட்டியிடுகின்ற தேர்தல் மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்குவதன் மூலம் கணக்கிடப்படும்.

குறித்த செலவின் மீதான மட்டுப்பாடு என்பது அதிகாரமளிக்கப்பட்ட பணத்தொகைக்கு மேலதிகமாக பிரச்சாரத்திற்காக செலவிடுவது குற்றமாகும். (2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள செலவின் மீதான மட்டுப்பாடு எனும் 15 ஆவரு அத்தியாயத்தைப் பார்க்கவும்)

## 06. தேர்தல் பரப்புரை செலவினங்களுக்காக நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல் மீதான தடைகள் ( 5 ஆம் பிரிவு))

தேர்தல் பரப்புரைச் செலவுகளுக்காக பல்வேறு தரப்பினர்கள் பணம் அல்லது பொருட்கள் அல்லது சேவைகளை நன்கொடைகளாக வழங்குவது இரகசியமான விடயமல்ல. சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கமைய கீழ்வரும் மூலங்களிலிருந்து

தேர்தல் பரப்புரைகளுக்காக நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வது தடையாகும்.

- அரச திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனம் அல்லது அரசுக்கு சொந்தமான பங்குகளைக் கொண்டிருக்கும் கம்பெனியிடமிருந்து,
- வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து, சர்வதேச அமைப்புக்களிடமிருந்து அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவிடமிருந்து,
- நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமல், ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட வெளிநாட்டுப் பங்குகளைக் கொண்டிருக்கின்ற இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தனியார் கம்பனிகளிடமிருந்து,
- ஆளடையாளம் வெளிக்காட்டப்படாத எந்தவொரு நபரிடமிருந்தும்,

## 07. நன்கொடைகள் மற்றும் செலவினங்கள் பற்றிய விபரத்திரட்டை சமர்ப்பிக்கும் பொறுப்பு

தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியற் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் மற்றும் வேட்பாளர்களும் தேர்தலொன்றின் முடிவு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு நாட்களுள் (21) தேர்தல் செலவினங்கள் தொடர்பான விபரத்திரட்டை குறித்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். குறித்த

விபரத்திரட்டு இரண்டு பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அதாவது,

(i) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளர் சார்பில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவினங்கள் தொடர்பான விபரத்திரட்டு,

(ii) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளர் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளும் உதவுதொகைகள் தொடர்பான விபரத்திரட்டு,

அரசியற் கட்சியின் விபரத்திரட்டு குறித்த அரசியல் கட்சியின் செயலாளரழனாலும், சுயேச்சைக் குழுவின் விபரத்திரட்டு குழுவின் குழுத்தலைவரினாலும், வேட்பாளருக்குரிய விபரத்திரட்டு வேட்பாளரினாலும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். (மேலதிக தெளிவூட்டலுக்காக 14 ஆவது அத்தியாயத்தைப் பார்க்கவும்) குறித்த விபரத்திரட்டில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் உண்மையெனவும் சரியானதெனவும் அத்தகைய செயலாளர், குழுத்தலைவர் வேட்பாளரினால் கையொப்பமிடப்பட்டு சமாதான நீதிவானொருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தையுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## 08. நன்கொடைகள் பற்றிய விபரத்திரட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய உதவுதொகைகள் (6(4) ஆம் பிரிவு))

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளர் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளும் உதவுதொகைகளும் அத்தகைய நன்கொடைகள் மற்றும் உதவுதொகைகள் பொருளாகவிருப்பின், குறித்த நன்கொடைகள் மற்றும் உதவுதொகைகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதியையும்,

(ஆ) அத்தகைய நன்கொடை அல்லது உதவுதொகையானது, கொடை, கடன் முற்பணம் அல்லது வைப்பு என்ற வகையில் இருந்ததென்பதையும்,

(இ) அத்தகைய நன்கொடை அல்லது உதவுதொகையை அளிக்கின்ற தனியாளின் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின், விடயத்திற்கேற்ப பெயரையும், முகவரியையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் அல்லது பதிவிலக்கத்தையும், குறிப்பிடுதல் வேண்டும்.

## 09. தேர்தல் பரப்புரை செலவினங்கள் விபரத்திரட்டுக்கு உட்சேர்க்கப்பட வேண்டிய செலவினங்கள் (6(5) ஆம் உட்பிரிவு))

(அ) அத்தகைய தேர்தல் தொடர்பான விளம்பரங்களை, துண்டுப்பிரசுரங்களை, கொடிகளை, வரைதல்களை, நிழற்படங்களை, ஒட்டுவிளம்பரங்களை அல்லது சுவரொட்டிகளை, அச்சிடுதலும் வெளியிடுதலும், ஒட்டுதலும் காட்சி வைத்தலும், அல்லது வெளிக்காட்டி வைத்தலுக்குமான செலவினங்கள்,

(ஆ) அத்தகைய தேர்தல் தொடர்பான விளம்பரங்களைத் தயாரித்தலும் மற்றும் வானொலியில் ஒலிபரப்புவதற்கும் அல்லது தொலைக்காட்சியல் ஒளிபரப்புவதற்குமான செலவினங்கள்,

(இ) அத்தகைய தேர்தல் தொடர்பான விளம்பரங்களைத் தயாரித்தலும் செய்தித்தாள்களிலும், சஞ்சிகைகளிலும் சமூக ஊடகங்களிலும், எண்ணிம (Digital) முறையிலான ஊடகங்களிலும் அல்லது வேறு வெளியீடுகளில் வெளியிடுதலுக்கான செலவினங்கள்,

(ஈ) அத்தகைய தேர்தல் தொடர்பான கூட்டங்களை நடாத்துவதற்கான எவையேனும் வளவுகளை (வளாகங்களை) அல்லது சாதனங்களை வாடகைக்கு எடுத்தல் அல்லது பயன்படுத்தல் போன்ற செலவினங்கள்,

(உ) வேட்பாளரை இடம்பெயர்ப்பதற்காக (போக்குவரத்து) வாகனங்களை வாடகைக்கு எடுத்தலுக்கான செலவினம் தவிர அத்தகைய தேர்தல் தொடர்பான செயற்பாடுகளுக்காக வாகனங்களை வாடகைக்கு எடுத்தலுக்கான செலவினங்கள், (ஊ) அத்தகைய வாகனங்களைச் செலுத்துவதற்கான எரிபொருள் வழங்குவதற்கான செலவுகள்,

இச்செலவினங்களை உறுதிப்படுத்துகின்ற சிட்டைகளுடனும் பற்றுச்சீட்டுக்களுடனும் சேர்த்து உள்ளடக்கப்பட வேண்டியதடன், மேற்படி சேவைகள் கொடுப்பனவின்றிப் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அத்தகைய சேவைகள் எவ்வாட்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டனவோ அவ்வாட்களின் பெயர்களும் முகவரிகளும் உள்ளடக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளரினால் அல்லது அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளர் சார்பில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

## 10. தேர்தல் செலவினங்கள் பற்றிய விபரத்திட்டில் உள்ளடக்கப்படாத செலவினங்கள்

(அ) தேர்தலான எந்த இடப்பரப்புக்காக நடாத்தப்படுகின்றதோ, அந்த இடப்பரப்பினுள் வேட்பாளரை இடப்பெயர்த்தலுக்கான (போக்குவரத்து) செலவினங்கள்

(ஆ) எழுதுகருவி வகைகள், தொலைபேசி அல்லது வேறு தொடர்பாடல் வழிவகைகளுக்கான செலவினங்கள்

## 11. தேர்தல் பரப்புரை செலவினங்கள் பற்றிய விபரத்திரட்டை மக்களுக்கு வெளிப்படுத்தல் ( 7 ஆம் பிரிவு))

தேர்தல் பரப்புரை செலவினங்கள் தொடர்பான விபரத்திரட்டுக்களும் வெளிப்படுத்துகைகளும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்ற பின்னர் பத்து (10) நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரத்திரட்டுக்களையும் வெளிப்படுத்துகைகளையும் அனைத்தையும் தெரிவத்தாட்சி அலுவலர் பெற்றுள்ளார் அல்லது பெற்றுள்ளது எனக் குறிப்பிடப்பட்டு அரசியற் கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் எவரேனுமாளினால் எவ்விடத்திலும் எந்நேரங்களிலும் பார்வையிடலாம் என்பதைச் சுட்டிக்காட்டியும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான ஆகக் குறைந்தது ஒரு செய்தித்தாளிலேனும் வெளியிடப்படுதல் வேண்டும்.

அதற்கமைய, அத்தகைய விபரத்திரட்டுக்களையும் வெளிப்படுத்துகைகளையும் பார்வையிட முடிவதுடன், தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான கட்டணத்தைச் செலுத்தி பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## 12. சட்டத்தின் கீழான குற்றங்கள் மற்றும் தண்டனைகள்

- **அதிகாரமளிக்கப்பட்ட தொகையை விஞ்சிய செலவுகளை மேற்கொள்ளல் -**

சட்டத்தின் 4 ஆம் பிரிவுக்கமைய அதிகாரமளிக்கப்பட்ட தொகையை விஞ்சியதாக தேர்தல் பரப்புரைச் செலவினங்களை மேற்கொள்கின்ற அரசியற் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் அல்லது வேட்பாளர் தவறுகின்ற போது, குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கீழ் கருத்துக்குட்பட்ட ஒரு "சட்ட முரணான பழக்கம்" என்ற தவறொன்றைப் புரிந்தமைக்கான, அத்தகைய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதல் வேண்டும்.

- **தடை செய்யப்பட்டவாறான நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளல்**

சட்டத்தின் 5(2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சட்டத்தின் மூலம் தேர்தல் பரப்புரைகளுக்கான நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ள மூலங்களிலிருந்து நன்கொடைகளையும் உதவுதொகைகளையும் பெற்றுக்கொள்கின்ற அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளர் தவறொன்றைப் புரிந்தமைக்காக குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கீழ் கருத்துக்குட்பட்ட ஒரு "சட்ட முரணான பழக்கம்" என்ற

தவறொன்றைப் புரிந்தமைக்கான, அத்தகைய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதல் வேண்டும்.

- **தேர்தல் விபரத்திரட்டுக்களை சமர்ப்பித்தல்**

சட்டத்தின் 8(அ) உட்பிரிவிரில் குறித்துரைக்கப்பட்டவாறான ஏற்பாடுகளுக்கமை, தேர்தல் விளம்பரங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரத்திரட்டுக்களும் வெளிப்படுத்துகைகளும் சரியான வகையில் சமர்ப்பிக்காதவிடத்து அரசியற் கட்சி, சுயேச்சைக்குழு அல்லது வேட்பாளர் தவறொன்றைப் புரிந்தமைக்காக குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கீழ் கருத்துக்குட்பட்ட ஒரு “சட்ட முரணான பழக்கம்” என்ற தவறொன்றைப் புரிந்தமைக்கான, அத்தகைய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதல் வேண்டும்.

- **தேர்தல் செலவினங்கள் தொடர்பான விபரத்திரட்டில் பொய்யான விடயங்களை வெளிப்படுத்தல்**

சட்டத்தின் 8(ஆ) உட்பிரிவுக்கமைய தேர்தல் பரப்புக்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நன்கொடைகள் மற்றும் செலவின விபரத்திரட்டில் உண்மைக்குப் புறம்பான விடயங்களை உள்ளடக்குகின்ற குறித்துரைக்கப்பட்ட எந்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடாத்தப்பட்டதோ அந்தச் சட்டத்தின் கீழ் கருத்துக்குட்பட்ட ஒரு “சட்ட முரணான பழக்கம்” என்ற தவறொன்றைப் புரிந்தமைக்கான, அத்தகைய சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட தண்டங்களுக்கு ஆளாதல் வேண்டும்.

- **தேர்தல் சட்டங்களில் குறித்துரைக்கப்பட்ட சட்டத்திற்கு முரணான செயல்கள் மற்றும் தண்டனைகள்**

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயத்தில்) 82க(1) உறுப்புரைக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 88 ஆம் உட்பிரிவுக்கமையவும், 1981 ஆம் ஆண்டிள் 01 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 87 ஆம் பிரிவுக்கமையவும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் 87 ஆம் பிரிவுக்கமையவும், "சட்டத்திற்கு முரணான பழக்கம்" என்ற தவறைப் புரிகின்ற ஆளொருவருக்கு,

- தவறு புரிகின்றவிடத்து, அவர் குறித்த நிறுவனத்தில் மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அப்பதவி இழக்கச் செய்தல்,
- மூன்று வருடங்களுக்கு குறித்த சட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தலில் வேட்பாளராக நியமிப்பதை தடை செய்தல்
- மூன்று வருடங்களுக்கு வாக்களாராக பதிவு செய்வதைத் தடை செய்தல் (இக்காரணத்தால் 03 வருடங்களுக்கு நடாத்தப்படும் எந்தவொரு தேர்தலிலும் வேட்பாளராக நியமிப்பதிலிருந்து தடை செய்தல்)
- ரூபா 300 தண்டப்பணமாக நியமித்தல்,

இத்தவறுகளுக்கு சட்டமா அதிபரின் அங்கீகாரத்துடன் வழக்குத் தொடரப்பட வேண்டியதுடன், உள்ளூர்

அதிகாரசபைகள் தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்களில் இடம்பெறுகின்ற சட்டத்திற்கு முரணான செயல்கள் தொடர்பாக வழக்கு நடவடிக்கைகள் நீதிவான் நீதிமன்றங்களிலும், பாராளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல்களிலும் இடம்பெறும் சட்டத்திற்கு முரணான செயல்கள் தொடர்பான வழக்குகள் மேல் நீதிமன்றங்களில் தொடரப்படும்.

## 13. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் தேர்தல் மனுக்கள்

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழான தவறுகள் தேர்தல் சட்டங்களின் கீழான "சட்ட முரணான பழக்கம்" எனும் தவறுக்குட்படும். அதற்கமைய, உள்ளூர் அதிகாரசபை தேர்தல்கள் கட்டளைச் சட்டம், மாகாண சபை தேர்தல்கள் சட்டம், பாராளுமன்ற தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தேர்தல் மனுவொன்று சமர்ப்பிக்கக்கூடிய தவறாக சட்ட முரணான செயலாக அடையாளங் காணப்படும்

அதற்கமைய தேர்தல் செலவினங்கள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் கீழ் புரிகின்ற தவறொன்றை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் தொடர்பான மனுத்தாக்கல் செய்யலாம். அத்தகைய மனு வெற்றியடைந்தால், பிரதிவாதியான வெற்றியீட்டிய வேட்பாளரின் உறுப்பினர் பதவி இரத்தாவதுடன், 03 வருடங்களுக்கு வாக்காளராகப் பதிவு செய்வதற்கும், அதன் காரணத்தால் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியீனத்திற்கும் ஆளாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாவிடினும், 1946 ஆம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தல்கள் அரச பேரவை கட்டளைச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில் வேட்பாளர் செலவுகள் தொடர்பான விபரத்திரட்டுக்களின் ஏற்பாடுகள் காணப்படுவதுடன், குறித்த செலவினங்கள் சரியான காலப்பகுதியில் சமர்ப்பிக்காதிருத்தல், ஒருசில செலவினங்கள் விபரத்திட்டில் உட்சேர்க்கப்படாமை போன்ற தவறுகள் தேர்தல் மனுத்தாக்கல்களில் வெளிவந்ததுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் வேட்பாளராக நியமனம் பெறுதல் போன்றன இழக்கப்பட்டுள்ளது.

இதனால், அதிகாரமளிக்கப்பட்ட தொகையை விஞ்சியவாறு மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அல்லது இச்சட்டத்தின் கீழ் வேறு தவறுகளைப் புரிகின்ற வேட்பாளர்களுக்கு குறித்த தேர்தலில் வெற்றியீட்டினாலும், அவ்வெற்றியை சவாலுக்குட்படுத்தி தேர்தல் மனுத்தாக்கல் செய்வதன் மூலம் அவருடைய உறுப்பினர் பதவியை இழக்கச் செய்வதற்கான வாய்ப்புக்கள் ஏனைய வேட்பாளர்களுக்கு உண்டு.

## 14. தரப்பினர்களின் பொறுப்புக்கள்

- ❖ வேட்பாளர்கள், அரசியற் கட்சிச் செயலாளர்கள், மற்றும் சுயேச்சைக் குழுவின் தலைவர்களின் பொறுப்புக்கள்

- தேர்தல் பரப்புரைகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் தொடர்பாக பற்றுச்சீட்டுக்கள் மற்றும் விபரத்திரட்டுக்களைப் பேணுதல். தேர்தல் பிரச்சாரங்களுக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து செலவுகளையும் நாளாந்தம் குறிப்பெடுத்துக் கொள்வதன் மூலம், சட்டத்திற்கு இணங்கியொழுகும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வசதியாக அமையும். அத்துடன், குறித்த செலவினங்களுக்குரிய பற்றுச்சீட்டுக்களையும் உறுதிச்சீட்டுக்களையும் முறையாகப் பேணுதல் மிகவும் முக்கியமானதாகும்.
- தேர்தல் பரப்புரைகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்படுகின்ற நன்கொடைகள் மற்றும் உதவுதொகைகள் தொடர்பான அறிக்கையைப் பேணுதல். ஆன்றாடம் பெற்றுக்கொள்கின்ற காசு, பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நாளாந்த விபரத்திரட்டைப் பேணுதல் வேண்டும். நன்கொடைகளை வழங்குகின்றவர்களின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய விபரங்களை சரியான வகையில் பேணுதல் வேண்டும். தனது ஆளடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாதவர்களிடமிருந்து தேர்தல் பரப்புகளுக்காக காசு, பொருள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் ஆகாது.
- சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ள மூலங்களிலிருந்து நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளாது விடல், குறிப்பாக இதுதொடர்பாக வேட்பாளர்கள் தமது ஆதரவாளர்களை தெளிவூட்டல் வேண்டும்.

- தேர்தல் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட பணத்தொகையை விஞ்சியவாறு தேர்தல் பரப்புரைகளுக்கு செலவுகளை மேற்கொள்ளாதிருத்தல்
- தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு இருபத்தொரு நாட்களுள் (21) குறித்த தெரிவத்தாட்சி அலுவலரிடம் தேர்தல் பரப்புரைகளுக்காகப் பெற்றுக்கொண்ட நன்கொடைகள் தொடர்பான விபரத்திட்டுக்களையும் வெளிப்படுத்துகைகளையும் சமாதான நீதிவான் ஒருவரால் உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல்.

தேர்தலுக்காக நியமனப்பத்திரம் வழங்கிய அனைத்து வேட்பாளரினதும், அரசியல் கட்சியினதும் மற்றும் சுயேச்சைக் குழுவின் குழுத்தலைவரின் சட்டரீதியான பொறுப்பாகும். தேர்தலில் வெற்றியீட்டுவது அல்லது வெற்றியீட்டாமை இச்சட்டத்தின் பொறுப்பில் மாற்றம் ஏற்படாது.

### ❖ தெரிவத்தாட்சி அலுவலரின் பொறுப்புக்கள்

- வேட்பாளரின், அரசியற் கட்சிகளின் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் செலவு விபரத்திரட்டுக்களைப் பொறுப்பேற்றல்
- பொதுமக்கள் செலவு விபரத்திரட்டைப் பார்வையிடுவதற்காக செய்தித்தாளில் விளம்பரப்படுத்தல்
- செலவு விபரத்திரட்டைப் பார்வையிடுவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்தல்

- தேர்தல் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படுகின்ற கட்டணத்தை அறவிட்டு பொதுமக்களுக்கு தேர்தல் செலவு விபரத்திரட்டுக்களின் பிரதிகளை வழங்கல்

❖ **குழுவின் பொறுப்புக்கள்**

  - ஒரு வாக்களருக்கு அதிகாரமளிக்கப்பட்ட பணத்தொகை மற்றும் தேர்தல் செலவின மட்டுப்பாடுகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடல்
  - செலவு விபரத்திரட்டுப் பிரதிகளுக்கான கட்டணத்தை தீர்மானித்தல்
  - சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பாகக் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொலிசு மற்றும் சட்டமா அதிபருடனான ஒருங்கிணைப்புக்கள்

❖ **பொலிசாரின் பொறுப்புக்கள்**

  - சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல்
  - புரியப்பட்டுள்ள தவறுகள் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளல்
  - சட்டமா அதிபரின் அனுமதியுடன் வழக்குத் தொடர்தல்

❖ **பிரஜைகளின் பொறுப்புக்கள்**

- அதிகாரமளிக்கப்பட்ட செலவுகள் தொடர்பாக உன்னிப்பான கவனத்துடன் இருத்தல்
- தேர்தல் பரப்புரை செலவுகள் தொடர்பாக உன்னிப்பாகக் கவனம் செலுத்துதல்
- தடை செய்யப்பட்ட மூலங்களிலிருந்து தேர்தல் பரப்புகளுக்காக பணம் கிடைக்கின்றதா என உன்னிப்பாகக் கவனம் செலுத்துதல்
- சட்டத்தின் கீரான தவறுகள் புரியப்படும் போது பொலிசு நிலையத்திற்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் முறைப்பாடு செய்தல்

## 15. உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023 பரப்புரை செலவுகள் மீதான மட்டுப்பாடு

2023 ஜனவரி மாதம் 00 திகதி தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தேர்தல் பரப்புரைச் செலவினங்கள் மீதான மட்டுப்பாடுகள் கீழ்வருமாறு அமையும்.

- **வட்டாரங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கான உயர்ந்தபட்ச தேர்தல் செலவினங்கள் மீதான மட்டுப்பாடு**

  வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற வட்டாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர்களின்

எண்ணிக்கையால் 20 ரூபாவைப் பெருக்குகின்ற போது கிடைக்கின்ற பணத்தொகை.

உதாரணமாக, வட்டாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை ஆயிரம் எனின், குறித்த வேட்பாளரின் உயர்ந்தபட்ச செலவினத் தொகை இருபதாயிரம் ரூபாய்களாகும்.

- **இரண்டாவது நியமனப் பட்டியலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கான உயர்ந்தபட்ச செலவினத்தொகை**

  20 ரூபாவினை உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்கும் போது கிடைக்கின்ற மொத்தத் தொகையின் 40% வீதமான தொகையைக் குறித்த குறித்த இரண்டாம் பட்டியலிலுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையால் வகுக்கும் போது கிடைக்கின்ற தொகை இரண்டாம் பட்டியலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கு செலவிடத்தக்க உயர்ந்தபட்ச தொகையாக அமையும்.

  உதாரணமாக, ஏதேனுமொரு உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில் வாக்காளர்கள் ஒரு இலட்சம் பேர் பதிவு செய்யப்பட்டிருப்பின், அத்தோடு இரண்டாவது நியமனப் பட்டியலில் 10 வேட்பாளர்கள் இருப்பின்,

- ✓ மொத்தச் செலவு (20 x 100,000 = 20 இலட்சம் ரூபாய்கள்
- ✓ இரண்டாவது நியமனப் பட்டியலிலுள்ள வேட்பாளர்களுக்கு (2,000,000 x 40 % )= 08 இலட்ச ரூபாய்கள்

- ✓ இரண்டாவது நியமனப் பட்டியலில் ஒரு வேட்பாளருக்குரிய செலவுத் தொகை (800,000 ÷10) = 80,000 எண்பதாயிரம் ரூபாய்களாகும்.

இரண்டாவது நியமனப் பட்டியலிலுள்ள வேட்பாளர்களுக்கு செலவிடக்கூடிய உயர்ந்தபட்ச தொகை எண்பதாயிரம் ரூபாவாகும்.

- **அரசியற் கட்சியொன்றின அல்லது சுயேச்சைக் குழுவுக்கான உயர்ந்தபட்ச செலவு மட்டுப்பாடு**

20 ரூபாவினை உள்ளூர் அதிகாரசபை இடப்பரப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையால் பெருக்கும் போது கிடைக்கின்ற மொத்தத் தொகையின் 60% வீதமான அரசியற் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றுக்கு செலவிடத்தக்க உயர்ந்தபட்ச தொகையாக அமையும்.

உதாரணமாக, உள்ளூர் அதிகார சபை இடப்பரப்பில் பதிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் வாக்காளர்கள் இருப்பின்,

- ✓ மொத்தச் செலவு (20 x 100,000 = 20 இலட்சம் ரூபாய்கள்
- ✓ அரசியற் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றுக்குரிய (2,000,000 x 60 % ) = 12 இலட்ச ரூபாய்கள்

குறித்த உள்ளூராட்சி மன்றத்தில் போட்டியிடுகின்ற அரசியற் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றுக்கு செலவிடத்தக்க உயர்ந்தபட்ச தொகை 12 இலட்ச ரூபாய்களாகும்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்காக கணக்கிடப்பட்ட உயர்ந்தபட்ச செலவுத்தொகை 2023 ஜனவரி மாதம் 25 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள 2316/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த வர்த்தமானி அறிவித்தலை www.documents.gov.lk ஊடாக பதிவிறக்கம் செய்யலாம்.

PAFFREL

PEOPLE'S ACTION FOR FREE AND FAIR ELECTIONS

# No.16, Byrde Place, Off Pamankada Rd, Colombo 06, Sri Lanka.
Tel: (+94) 11 2 558 570 / 11 2 558 571
Fax: (+94) 11 2 558 572
E-Mail: paffrel@sltnet.lk    Website: www.paffrel.com